(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென நான் முன்மொழிகிறேன்.

இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்போது பற்பல செலவுகள் ஏற்படுகின்றன. அவற்றை ஓரளவு சரிக்கட்டிக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ 100ஐ ஈட்டுப்படியாக 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் அளிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

பேரவை உதவித் தலைவருக்கும், மேலவை உதவித் தலைவருக்கும் கொடுக்கப்படும் ஊர்திப்படியினை மாதத்திற்கு ரூ. 100-ல் இருந்து ரூ. 200 ஆக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

இறந்துபோன சட்டமன்ற உறுப்பினரது பதவிக் காலம் முடிவடையாத காலத்தில் அன்னார் குடும்பத்தினருக்கு மாதம் ரூ. 100 படி வழங்கப்படும் என்று 1970-ம் ஆண்டில் இவ்வரசு சட்டமியற்றியது. இச்சட்டம் அமலுக்கு வருமுன்பே இறந்துபோன பல சட்டமன்ற உறுப்பினர்களது குடும்பத்தினர் இந்தப் படியை தங்களுக்கும் வழங்க விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்தச் சலுகையை தருவதற்கு இந்த படியினை 1967-ம் ஆண்டு சனவரி திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப் பின் இறந்துபோன சட்டமன்ற உறுப்பினர்களது குடும்பத்தினருக்கு வழங்குவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

தற்பொழுது தமிழ்நாடு 1951-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தில் சம்பளம் அல்லது படியினது உரிமை விடுதல் ரத்து செய்ய யாதொரு விதித்துறை இல்லை. எனவே, இந்தச் சம்பளம் அல்லது படியினை உரிமை விடுதல் ரத்து செய்வதற்காக மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இப்போது பேரவை முன்னுள்ள இம்மசோதாவில் இதுகுறித்த விதித் துறைகளும் அமைந்துள்ளன. இப்பேரவை இத் தீர்மானத்தை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

---

*23-10-1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1971 டிசம்பர் 14]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரிலே அதிகமான அளவில் விவாதிப்பது அவசியமில்லையென்று கருதுகிறேன். அதேநேரத்தில் சென்ற சட்டமன்றத் தொடரிலே இந்த மசோதாவானது தாக்கல் செய்யப்பட்ட நேரத்தில் இங்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, சுதந்தரா கட்சி ஆகிய நான்கு கட்சிகளின் சார்பிலும் ஒரு திருத்தம் கொடுத்திருந்தோம். இந்தச் சட்ட அமைப்பின் பிரகாரம் அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய 100 ரூபாய் அலவன்ஸ் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பானது ஜூலை மாதத்தில் கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டது. என்றைக்கு அந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டதோ, அந்த அறிவிப்புத் தேதியிலிருந்து இது அமலுக்கு வர வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அது ஜூலை 1-ம் தேதியிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் முறையுடன் என்கிற அந்தத் திருத்தத்தை அரசே கொண்டு வந்தாலும், அல்லது எங்கள் திருத்தத்தை ஏற்றுக் கொண்டாலும் மிக்க உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் 100 ரூபாய் ஈட்டுப்படியை, எந்தத் தேதியில் முடிவு செய்யப்பட்டதோ, அதாவது அக்டோபர் மாதம் என்று போட்டோம். எதிர்க்கட்சி சார்பிலே முன்கூட்டியே கொடுக்கலாம் என்கிற கருத்தைச் சொன்னார்கள். இந்தச் சட்டம் வரும்போது அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கும் போர்க்கால நிலைமையை உத்தேசித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் இதை வற்புறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் தான் அரசாங்கமும் இது வேண்டாம் என்று முடிவு எடுத்தது. ஒரு வேளை நாங்களே அப்படிச் சொல்லியிருந்தாலும், கனம் உறுப்பினர்கள் வேண்டாமென்றுதான் சொல்வார்கள். ஆகவே, இது இப்போதைக்குத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை முன்வடிவு எண் 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.